ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1573 - 2008 ඔක්තෝබර් 24 වැනි සිකුරාදා - 2008.10.24

*1573 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1185 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.**- (i) இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகம் சட்டமூலம் 2008, செத்தெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஒதுக்கீட்டு சட்டமூலம் 2008, செத்தெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) பிரதேசிய சங்வர்த்தனை வங்கி சட்டமூலம் 2008, செத்தெம்பர் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஒற்றோபர் 31 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஒற்றோபர் 17 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பதவிகள் - வெற்றிடம்

## கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்

இலங்கைக் கணக்காய்வு சேவையின் வகுப்பு II இன் தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகள்

*2008, ஓகத்து 20 ஆந் திகதிய 1563/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 1989.12.11 ஆந் திகதிய 588/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 1984, மார்ச்சு 20 ஆந் திகதிய 289/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு சேவைக் குறிப்பின் பந்தி 4 (iii) இல் பிரகாரம் இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகரின் ஏழு பதவிகளுக்காக கீழே பந்தி 4 இல் குறிப்பிடப்பட்ட தொழிசார் தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரியிடமிருந்து மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி விண்ணப்பங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, "கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், கொழும்பு 7" இற்கு முகவரியிடப்பட வேண்டியதுடன் பின்வரும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் :-*

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 2008.11.23
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 2008.11.30

விண்ணப்பங்களை அனுப்புகையில் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் கட்டாயமாக "கணக்காய்வு அத்தியட்சகர் வகுப்பு II தரம் II பதவிகள்" என தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**குறிப்பு**.- தபாலில் தொலைந்த அல்லது தாமதப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் என எந்தவொரு முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட முடியாது. கடைசி நாள்வரை அவர்களுடைய விண்ணப்பங்களைத் தாமதப்படுத்திய விண்ணப்பதாரியே அதற்குப் பொறுப்பானவராகும்.

2. **பணியமர்த்தல் காலமும் சேவை நிபந்தனைகளும்**.- (i)1989, திசெம்பர் 11 ஆந் திகதிய 588/5 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு சேவைக் குறிப்பில் குறிப்பிட்ட காலம் மற்றும் நிபந்தனைகளில் இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இற்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்பதுடன் ஏதாவது திருத்தங்கள் இதற்கு மேல் செய்யப்படலாம்.

(ii) இந்த பதவியானது நிரந்தரமானதுடன், ஓய்வுதியத்திற்குரிய, பங்களிப்புகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செய்ய வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் முதலாவது சந்தர்ப்பத்தில் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்தில் நியமிக்கப்படுவர்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு விண்ணப்பதாரிகள் கட்டாயம் இணங்க வேண்டியதுடன் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையின் படி காலத்துக்குக்காலம் வெளியிடப்படும் ஏதாவது வேறு சட்டங்கள், பிரமாணங்கள் அல்லது விதிகளுக்கிணங்க செயற்பட வேண்டும்.

(v) அவர்களுடைய தகுதிகாண் காலத்தின் இறுதியில் உறுதிப்படுத்தல் பின்வருவனவற்றில் தங்கியுள்ளது:-

(அ) வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது, மற்றும்

(ஆ) தகுதிகாண் காலத்திற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைப் பரீட்சை சித்தியடைதல்.

(vi) தகுதிகாண் கடமை காலத்தின் முடிவில் உறுதிப்படுத்தத் தவறினால் அவர்களுடைய சேவை இடைநிறுத்தவேண்டி ஏற்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 மாதாந்த திரட்டிய சம்பளத்திற்கு தகுதியுடையவர். "அவர் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் இலங்கை கணக்காய்வு சேவையில் வகுப்பு II தரம் II இல் உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்ற" நிபந்தனைக்கு உட்பட்டு மாதம் ஒன்றிற்கு ரூபா 26,805 ஆம் சம்பள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

4. **வேண்டப்பட்ட கல்வித் தகைமைகள்**.-ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கட்டாயம் பின்வருவனவற்றை உறுதிசெய்ய வேண்டும் :-

(அ) சிறந்த நன்னடத்தை மற்றும் உறுதியான தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் ;

(ஆ) பிறப்பு அல்லது பதிவால் இலங்கைப் பிரசை ;

(இ) 2008.11.23 இல் 22 வயதிற்கு குறையாததும் 45 வயதிற்கு மேற்படாததும் (ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் நியமனம் பெற்ற விண்ணப்பதாரிக்கு இந்த வயதெல்லை பொருத்தமற்றது) ;

(ஈ) பின்வரும் நிறுவகங்கள் ஏதாவதொன்றில், இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் அவற்றின் உறுப்புரிமை பெற்றோர் :-

(i) இலங்கை பட்டய கணக்காளர் நிறவனம் அல்லது இலண்டன் மற்றும் வேல்ஸ்

(ii) முகாமைத்துவ கணக்காளர் பட்டய நிறுவனம், யூ. கே. அல்லது அதே தொழில் தகைமை

(iii) சான்றுபடுத்திய பட்டயக் கணக்காளர் சங்கம் யூ. கே. அல்லது இதற்கு சமமான தொழில் துறை சார்ந்த நிறுவகம்.

*குறிப்பு*.- ஏதாவது பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர் விண்ணப்பங்களை அனுப்பமுடியாது.

5. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.- கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளடங்கிய மூன்று அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட சபையில் விணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு உட்படத்தப்படுவார். மற்றும் பொது சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்தின்படி புள்ளிகளைப் பெற்ற பின்னர் சபையின் சிபாரிசுகளில் பொது சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட வேண்டும்.

6. விண்ணப்பதாரி கோரப்படும் நேரத்தில் அவ்வாறு கோரப்படும் பின்வரும் ஆவணங்களின் ஏதாவதை அல்லது முழுவதையும் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) தொழில்சார் மற்றும் ஏனைய கல்வித்தகைமை சான்றிதழ் ;

(இ) நன்னடத்தைக்கான அண்மைய இரண்டு நன்னடத்தை சான்றிதழ்.

(ஈ) சிங்களம்/ தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சித்தியெய்திய அதிகூடிய பரீட்சை சான்றிதழ்

குறிப்பு : (i) ஆவணங்களை அல்லது ஆவணங்களின் பிரதிகள் ஏதாவதை விண்ணப்பத்துடன் இணைக்கலாகாது.

(ii) கோரப்படும் நேரத்தில் ஆவணங்களை கையளிக்கத்தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

7. அரச/மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிட மிருந்தான விண்ணப்பங்கள் கட்டாயம் அவர்களுடைய நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களின் பிரதிகள் முடிவுத் திகதிக்கு முன்னர் நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பமுடியும்.

8. விண்ணப்பங்கள் மற்றும் ஏதாவது தொடர்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது திணைக்களத்திலுள்ள யாராவது உத்தியோகத்தருக்கு தனிப்பிட்ட ரீதியாக முகவரியட முடியாது.

9. வர்த்தமானியின் பகுதி I : தொகுதி I (II அ) இன் தொடக்கத்தில் தெரியப்படுத்தப்பட்ட அரச சேவையிலுள்ள நியமங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகிறது.

10. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி இறுதி திகதியிலிருந்து தொடங்கும் மூன்று கிழமைகளுக்குள் விண்ணப் பதாரிக்கு அனுப்பப்படும். ஒப்புக்கோரல் பெறப்பட்டிருக்காவிடின், உடனடியாக "கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், கொழும்பு 7" இற்கு அறிவிக்க வேண்டும்.

11. மேற்குறிப்பிட்ட பிரமாணங்கள் மூலம் மேவப்பட்டிருக்காத ஏதாவது விடயங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைபடி,

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2008, ஒற்றோபர்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்**

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II இன் தரம் II இல்
கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகள்

1. (i)முதலெழுத்துக்களுடன் பெயர் :-----
(ii)முழுப் பெயர் :-----

2. நிரந்தர முகவரி :-----

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----

4. (அ) ஆண்/பெண் :-----
(ஆ) திருமணமானவர்/தனியார்/விதவை :-----

5. (i) பிறந்த திகதி :-
ஆண்டு:----- மாதம் :----- திகதி :-----
(ii) 2008.11.23 ஆந் திகதியில் வயது :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

6. (i) பிறப்பாலா அல்லது பதிவாலா நீர் இலங்கைப் பிரசை :-----
(ii) இன அடிப்படை :-----
(சிங்களவர்/தமிழர்/இந்திய வம்சாவளினர்/முஸ்லிம்கள்)

7. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :-----

| நிறுவனம் | பெறப்பட்ட தகைமைகள் | அத்தகைய தகைமைகள் பெற்ற திகதி |
|---|---|---|
| | | |

8. தற்போதைய பதவி விபரம் :-
(அ) பதவி :-----
(ஆ) திணைக்களம்/நிறுவகம் :-----
(இ) நியமனத் திகதி :-----
(ஈ) நிரந்தர மற்றும் ஓய்வுதியத்திற்குரிய, தற்காலிக அல்லது ஒப்பந்த அடிப்படை :-----
(உ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவரெனின் :-
(ஊ) வருடாந்த சம்பள மட்டம் :-----
(எ) தற்போதைய வருடாந்த சம்பளம் :-----

9. பெறப்பட்ட உயர் கல்வித் தகைமை :-
சிங்களம் :----- தமிழ் :----- ஆங்கிலம் :-----

10. இரண்டு குறிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் :-
(i) :-----
(ii) :-----

11. ஏதாவது வேறு விபரங்கள் இருப்பின் :----.

இங்கே தரப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதும் மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் பரீட்சையின் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும் நியமனத்திற்கு முன்னர் நான் தகைமை அற்றவரென தெரியவரின் நியமனத்தை இரத்து செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் உள்ளாவதுடன் நியமனம் கிடைத்த பின்பு தெரியவரின் என்னை நட்டஈடு ஏதுமின்றி

பதவியிலிருந்து நீக்கப்பட முடியுமென்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவராயுமுள்ள திரு./திருமதி/ செல்வி......................................அவர்கள், 2008.......................... மாதம்....................ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

............................
கையொப்பத்தை
உறுதிப்படுத்துவோரின் கையொப்பம்.

இடம் :-----
உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-----
பதவி :-----
முகவரி :-----
திகதி :-----

13. **விண்ணப்பதாரி அரச/ மாகாண அரச சேவையிலுள்ளவரெனின் நிறுவனத்தின் தலைவரிடமிருந்தான சான்றிதழ் :**

இந்த விண்ணப்பத்தை அனுப்புவராகிய.............................. ..............இந்த நிறுவனத்தில்............................................இலிருந்து வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் அவருடைய நடத்தை திருப்திகரமாக உள்ளது. விண்ணப்பதாரி பதவியில் உறுதிப் படுத்தப்பட்டதுடன் மேற்குறித்த 8 உடன் தொடர்புபட்ட விபரங்கள் இந்த அலுவலகத்தில் கிடைக்கும் பதிவேடுகளிலிருந்து என்னால் தனிப்பட்டரீதியில் ஆய்வு செய்யப்பட்டதுடன் அவர் 2008......................இன்............... நாள் என்முன்னிலையில் கையொப்பமிட்டார் என இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

............................
அரச/மாகாண அரச நிறுனத் தலைவர் அல்லது
அவருடைய அதிகாரம் பெற்றவர்.

திகதி :-----

10-748

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.